உதவி அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்.
(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்)
**முன்னிலை: – திருமதி. வா. தீபா, எம்.எல்.,**
உதவி அமர்வு நீதிபதி, திண்டுக்கல்.
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திண்டுக்கல்.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள் வியாழக்கிழமை
**அமர்வு வழக்கு எண். 07/2025.**
C.N.R. No.TNDG03–000184–2025
(முதல்நிலை விசாரணை வழக்கு எண். 46/2018)

தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய
குற்ற எண். 245/2018 ………… குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

1) அசோக்குமார், வயது 24/2018
த/பெ. பாண்டி (எ) திருப்பூர் பாண்டி,
எம்.டி.எஸ் நகர், குடைப்பாறைப்பட்டி,
திண்டுக்கல்.

2) சந்திரசேகர், வயது 22/2018
த/பெ. பாண்டி (எ) திருப்பூர் பாண்டி,
எம்.டி.எஸ் நகர், குடைப்பாறைப்பட்டி,
திண்டுக்கல்.

3) சீனிவாசன், வயது 20/2018
த/பெ. ரெங்கநாதன்,
7, சின்னராஜா தெரு,
பேகம்பூர், திண்டுக்கல்.

4) ராஜீவ்காந்தி, வயது 30/2018 **(Split–up in SC.328/2025)**
த/பெ. செட்டியப்பன்,
கருப்புசாமி கோயில் மேற்கு தெரு,
குடைப்பாறைப்பட்டி, திண்டுக்கல். ……… எதிரிகள்.

| | |
|---|---|
| எதிரிகள் மீதான குற்றம் : | 1வது எதிரி அசோக்குமார், 2வது எதிரி சந்திரசேகர் ஆகியோருக்கும், சாட்சி–1 கோபிநாதனுக்கும் இடையே சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மேற்படி சாட்சி ஆஜர் எதிரியின் அப்பாவை குத்தியது சம்பந்தமாக இருந்து வந்த முன் பகை காரணமாக கடந்த 11.04.2016–ம் தேதி 21.00 மணியளவில் திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட குடைபபாறைப்பட்டி சந்தன கருப்பு கோவில் அருகே வைத்து 1 முதல் 4 எதிரிகள் சாட்சி–1 கோபிநாதனைப் பார்த்து இந்த தேவிடியா மகன்தான்டா எங்க அப்பனை குத்தினது என்று அருவறுக்கத்தக்க ஆபாசமான வார்த்தைகளால் திட்டியுள்ளார்கள். மேலும், 3, 4 எதிரிகள் சாட்சி–1ஐ, 1, 2 எதிரிகள் கத்தியால் குத்துவதற்கு ஏதுவாக கோபிநாதனை எங்கும் நகரவிடாமல் பிடித்து அடக்கி வைத்திருந்துள்ளார்கள். மேலும், 1, 2 எதிரிகள் மேற்படி முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு சாட்சி–1 கோபிநாதனை கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் கத்தியால் வயிறு மற்றும் வலது கால் தொடையில் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தி கொலை முயற்சி செய்துள்ளார்கள். மேலும், 1 முதல் 4 எதிரிகள், பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 வரையானவர்களை கத்தியைக் காட்டி யாராவது வந்தால் உங்களையும் குத்தி கொன்றுவிடுவேன் என கொலை மிரட்டல் விடுத்த குற்ற செய்கைக்காக எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 506(2), 307, உ/இ 34–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. |
| 1 முதல் 3 எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு : | 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 506(2), 307 உ/இ 34–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. |
| எதிரிகளின் வாதுரை : | குற்றவாளிகள் இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு : | குற்றவாளிகள் இல்லை. |

தீர்ப்பு : அரசு தரப்பில் 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 307, 506(2) உ/இ 34–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R. No. 34/2025–ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 சுமார் 37 செ.மீ நீளமுள்ள மரக் கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று, சா.பொ.2 சுமார் 34 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று. மேற்படி வழக்கு சொத்து பற்றிய உத்தரவு இந்த வழக்கில் தொடர்புடைய மற்றொரு வழக்கான SC.328/2025 என்ற வழக்கின் முடிவில் பிறப்பிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கு என் முன்பாக 26.03.2026–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் திரு. M. விஜயேந்திரன், கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களும், A1, A2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பழனிக்குமார் அவர்களும், A3 எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.வெள்ளைச்சாமி அவர்களும் முன்னிலையாகி வாதிட்டதைக் கேட்ட பின்னர், இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இறுதியாக 26.03.2026–ம் தேதி அன்று

விசாரணைக்கு வந்து, இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்த பின்னர், இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

## தீர்ப்புரை

1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-

1வது எதிரி அசோக்குமார், 2வது எதிரி சந்திரசேகர் ஆகியோருக்கும், சாட்சி-1 கோபிநாதனுக்கும் இடையே சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மேற்படி சாட்சி ஆஜர் எதிரியின் அப்பாவை குத்தியது சம்பந்தமாக இருந்து வந்த முன் பகை காரணமாக கடந்த 11.04.2016-ம் தேதி 21.00 மணியளவில் திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட குடைபபாறைப்பட்டி சந்தன கருப்பு கோவில் அருகே வைத்து 1 முதல் 4 எதிரிகள் சாட்சி-1 கோபிநாதனைப் பார்த்து இந்த தேவிடியா மகன்தான்டா எங்க அப்பனை குத்தினது என்று அருவறுக்கத்தக்க ஆபாசமான வார்த்தைகளால் திட்டியுள்ளார்கள். மேலும், 3, 4 எதிரிகள் சாட்சி-1ஐ, 1, 2 எதிரிகள் கத்தியால் குத்துவதற்கு ஏதுவாக கோபிநாதனை எங்கும் நகரவிடாமல் பிடித்து அடக்கி வைத்திருந்துள்ளார்கள். மேலும், 1, 2 எதிரிகள் மேற்படி முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு சாட்சி-1 கோபிநாதனை கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் கத்தியால் வயிறு மற்றும் வலது கால் தொடையில் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தி கொலை முயற்சி செய்துள்ளார்கள். மேலும், 1 முதல் 4 எதிரிகள், பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 வரையானவர்களை கத்தியைக் காட்டி யாராவது வந்தால் உங்களையும் குத்தி கொன்றுவிடுவேன் என கொலை மிரட்டல் விடுத்த குற்ற செய்கைக்காக எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 506(2), 307, உ/இ 34-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என திண்டுக்கல் தெற்கு காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற அறிக்கையை பரிசீலனை செய்து, முடிவில் இவ்வழக்கானது திண்டுக்கல், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3–ல் PRC 46/2018 ஆக 31.08.2018–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கின் எதிரிகள் திண்டுக்கல், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3–ல் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு இவ்வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றச் சாட்டுக்கள் என்பதால், முதல் நிலை பதிவு வழக்கினை திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 209(அ)ன் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் இவ்வழக்கானது 04.01.2025–ம் தேதியன்று அமர்வு வழக்கு எண். 07/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜரானபோது, இருதரப்பினைக் கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரிகள் இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றத்தினை புரிந்திருக்கக் கூடும் என்று அனுமானிக்க போதிய ஆதாரங்கள் இருந்ததால், 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 506(2), 307, உ/இ 34–ன் கீழ் எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்தார்கள். எதிரிகள் குற்றத்தினை மறுத்த காரணத்தினால், இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

4. அதன் பேரில் அரசுத் தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில், அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்களும், சான்று பொருளாக சா.பொ.1, சா.பொ.2 சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>5. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

I) இந்த வழக்கில் அ.சா.1 கோபிநாதன் என்பவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியைத் தெரியாது என்றும், இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியாது என்றும், இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் தன்னுடையது தான் என்றும், போலீசார் ஒரு எழுதாத வெள்ளைத் தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். அ.சா.2, அ.சா.1ன் சகோதரர் ஆவார். இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார்.

ii) அ.சா.3 முருகன் என்பவர் ஒப்புதல் வாக்கு மூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பங்களை மட்டும் ஒப்புக் கொண்டு அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார். அ.சா.4 முரளிதரன் என்பவம் இந்த வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், சம்பவ இடத்தில் தான் இல்லை என்றும், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 சின்னச்சாமி என்பவர் பார்வை மகஜரில் உள்ள கையொப்பத்தை ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 சூரியா,

அ.சா.7 சுபாஷ் ஆகியோர் ஆஜர் எதிரிகளைத் தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார்.

iii) அ.சா.8 திரு. லிங்கபாண்டியன், காவல் ஆய்வாளர் கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன் சாட்சியத்தில், தான் தற்போது திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ்குமார் மற்றும் பொறுப்பு காவல் ஆய்வாளர் திரு. சுரேஷ் மற்றும் காவல் நிலைய ஆய்வாளர் திரு. ராஜசேகர் ஆகியோர்களது கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு நன்கு பரிட்சியம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 11.04.2018ம் தேதி 21.40 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ்குமார் அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்தபோது, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று, மேற்படி மருத்துவமனை சென்றதில் மேற்படி காயம்பட்ட நபர் மேல் சிகிச்சைக்காக மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு சென்றுவிட்டதால், 12.04.2018ம் தேதி காலை 06.00 மணிக்கு மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த கோபிநாதன், த/பெ. பழனிச்சாமி என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ.5 புகார் வாக்குமூலம் பெற்று, அன்றை தினம் 08.00 மணிக்கு நிலையம் வந்து திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய குற்ற எண். 245/2018, சட்டப்பிரிவுகள் 294(b), 342, 307, 506(ii) இ.த.ச வாக அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், மேற்படி வழக்கு கோப்பினை அப்போதைய பொறுப்பு காவல் ஆய்வாளர் திரு. சுரேஷ் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், மேற்படி வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் திரு. சுரேஷ் அவர்கள் அவரது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினமே சம்பவ இடம்

சென்று, சாட்சிகள் சின்னச்சாமி மற்றும் துளசி மணி ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.6 பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் சாட்சிகள் கோபிநாதன் என்பவரை மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை சென்று விசாரணை செய்தும், சூரியா, அருண், சுபாஷ், முரளிதரன், சீனிவாசன், ஹரிஹரன், சின்னச்சாமி, துளசிமணி, சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ்குமார் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் எதிரிகளைத் தேடி வந்த நிலையில் 12.04.2018 ம் தேதி 14.30 மணிக்கு திண்டுக்கல், தோமையாபுரம் பேருந்து நிறுத்தத்தில் வைத்து எதிரிகளைக் கைது செய்து, சாட்சிகள் விஜயகுமார் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் எதிரி அசோக்குமார் என்பவரை விசாரிக்க அவர் அளித்த ஒப்புதல் வாக்கமூலத்தினை பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி ஒப்பபுதல் வாக்கமூலத்தின் அடிப்படையில், தோமையாபுரம், பூதமரத்துப்பட்டி பிரிவு, வாட்டர் டேங்க் பின்புறம் உள்ள புதரில் மறைத்து வைத்து எடுத்து ஆஜர் செய்த சா.பொ.1, சா.பொ.2 கத்திகள் – 2 ஐ மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் 16.30 மணிக்கு அ.சா.ஆ.10 அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார் என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகளான விஜயகுமார் மற்றும் முருகன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் 17.00 மணிக்கு நிலையம் வந்து, எதிரிகளை திரேக பரிசோதனை செய்து, பாரா வசம் ஒப்படைத்து, தகுந்த வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும், பின்னர் அன்றைய தினமே மேற்படி எதிரிகளிடம் இருந்து கைப்பற்றிய சொத்துக்களை அ.சா.ஆ.11 படிவம் – 91 மூலம் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்னர் வழக்கு கோப்பினை நிலைய ஆய்வாளர் திரு. ராஜசேகர் அவர்களிடம் ஒப்படைத்துள்ளார் என்றும், பின்னர் மேற்படி வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் திரு. ராஜசேகர் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை

செய்ததில் இதற்கு முன் விசாரணை செய்த ஆய்வாளரிடம் சொன்னதையே சொன்னதால் புதிதாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர் 14.06.2018ம் தேதி மேற்படி காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை மருத்துவர் திருமதி. சுகன்யா அவர்கள் மற்றும் 18.06.2018ம் தேதி திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. விஜயசந்தர் அவர்களை விசாரணை செய்து, அ.சா.ஆ.12 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் பெற்று, வாக்கமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் விசாரணையின் அடிப்படையில் அன்றைய தினமே வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 342, 307, 506(ii) இ.த.ச. வில் இருந்து, சட்டப்பிரிவுகள் 294(b), 342, 307, 506(ii) r/w 34 இ.த.ச. வாக பிரிவு அ.சா.ஆ.13 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கின் புலன் விசாரணையை முடித்து 18.06.2018ம் தேதி மேற்படி எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 342, 307, 506(ii) r/w 34 இ.த.ச. வின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இந்த எதிரிகளுக்குப் பாதகமாகத் தோன்றிய சங்கதிகளை குறித்து எதிரிகளிடம் பிரிவு 351 BNSS–ன் கீழ் விசாரணை செய்தபோது, எதிரிகள் அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், பொய் வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறியுள்ளார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததால், விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

7. இந்த வழக்கில் அரசு தரப்பில் முன்னிலையான அரசு தரப்பு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் முன்வைத்த வாதங்களும், எதிரிகள் தரப்பில்

ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் முன் வைத்த வாதங்களும் இந்நீதிமன்றத்தால் கவனமாக கருத்தில் கொள்ளப்பட்டன.

8. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச் சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:–</u>**

9. அரசுதரப்பு வழக்கில், கடந்த 11.04.2016–ம் தேதி 21.00 மணியளவில் திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட குடைபபாறைப்பட்டி சந்தன கருப்பு கோவில் அருகே வைத்து 1 முதல் 4 எதிரிகள் சாட்சி–1 கோபிநாதனைப் பார்த்து இந்த தேவிடியா மகன்தான்டா எங்க அப்பனை குத்தினது என்று அருவறுக்கத்தக்க ஆபாசமான வார்த்தைகளால் திட்டியதாகவும், 3, 4 எதிரிகள் சாட்சி–1ஐ, 1, 2 எதிரிகள் கத்தியால் குத்துவதற்கு ஏதுவாக கோபிநாதனை எங்கும் நகரவிடாமல் பிடித்து வைத்துக் கொண்டும், 1, 2 எதிரிகள் மேற்படி முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு சாட்சி–1 கோபிநாதனை கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் கத்தியால் வயிறு மற்றும் வலது கால் தொடையில் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தி கொலை முயற்சி செய்துள்ளார்கள் என்றும், மேலும், 1 முதல் 4 எதிரிகள், பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 வரையானவர்களை கத்தியைக் காட்டி யாராவது வந்தால் உங்களையும் குத்தி கொன்றுவிடுவேன் என கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள் என்றும், இந்த வழக்கின் புகார்தாரரான அ.சா.1 கோபிநாதன் என்பவர் கொடுத்த புகார் மனுவின் பேரில் திண்டுக்கல் தெற்கு காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

10. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1, சா.பொ.2 சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

11. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் முறையாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பரிசீலிக்கையில், அ.சா.1 இவ்வழக்கின் சம்பவம் பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சியாகவும், அ.சா.4, அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகியோர் சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்தும், எதிரிகளைப் பற்றியும் கூறும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.2 சம்பவத்தை கேள்விப்பட்டது குறித்தும், அ.சா.3 ஒப்புதல் வாக்கு மூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ய சாட்சிகளாக இருந்து கையொப்பமிட்டது பற்றியும், அ.சா.5 பார்வை மகஜரில் கையொப்பம் செய்தது குறித்து கூறும் சாட்சியாகவும், அ.சா.8 லிங்கப்பாண்டியன் காவல் ஆய்வாளர் கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி சாட்சிகள் சாட்சிப் பட்டியலில் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

12. இந்த வழக்கில் முக்கிய சாட்சியான காயம்பட்ட நபரும், புகார்தாரருமான அ.சா.1-ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், இந்த வழக்கின் எதிரிகளைத் தெரியாது என்றும், வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், போலீசார் எழுதாத வெள்ளைத் தாளில் கையொப்பம் மட்டும் வாங்கியதாகவும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதும், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதையும் அளிக்கவில்லை.

13. வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சிப் பட்டியலில் காட்டப்பட்டுள்ள அ.சா.4, அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகியோரின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.4 வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், கோபியை கத்தியால் குத்தியதாக சொல்லி தன்னை சாட்சிக்கு அழைத்து வந்தார்கள் என்றும், அதை நேரில் பார்க்கவில்லை என்றும், சம்பவ இடத்தில் இல்லை என்றும் கூறியுள்ளார். அ.சா.6, அ.சா.7 ஆகியோர் வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும் கூறியுள்ளார்கள். மேற்படி மூவருமே அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக மாறி இருக்கிறார்கள். அ.சா.2 எதிரிகள் யாரையும் தெரியாது என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் கூறியுள்ள நிலையில், மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

14. மேலும், போலீசார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகஜர் தயார் செய்து அதில் கையொப்பமிட்ட சாட்சிகளாக அ.சா.5 விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது முதல் விசாரணை சாட்சியத்தில், பார்வை மகஜரிலுள்ள தனது கையொப்பத்தை ஒப்புக் கொண்டுள்ளார். அவரது குறுக்கு விசாரணையில், எழுதாத வெள்ளைத் தாளில் தான் போலீசார் தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான் என்றும், என்ன வழக்கு என்று தனக்குத் தெரியாது என்றும் கூறியுள்ள நிலையில், அவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. இந்த வழக்கின் மிக முக்கிய சாட்சியான எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்த சாட்சியாக அ.சா.3 விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், ஒப்புதல் வாக்கு மூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள தனது கையொப்பங்களை மட்டும் ஒப்புக் கொண்டுள்ளார். மேற்படி கையொப்பங்களை எதற்காக செய்தேன் என்று தெரியாது என்றும், தனது முன்பாக எந்த

கத்தியையும் போலீசார் கைப்பற்றவில்லை என்றும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார். அ.சா.8 காவல் ஆய்வாளர் கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். சார்பு ஆய்வாளர் ரமேஷ்குமார் மற்றும் பொறுப்பு காவல் ஆய்வாளர் திரு.சுரேஷ் ஆகியோரின் கையெழுத்து தனக்கு நன்கு பரிட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

15. மேலே விவாதிக்கப்பட்டபடி, அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்கும் அளவிற்கு அ.சா.1 முதல் அ.சா.4 மற்றும் அ.சா.6, அ.சா.7 வரையுள்ள சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களைப் பொறுத்து, அதை அவர்கள் தான் செய்தார்களா என்பதை புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து முடிவு செய்துவிட இயலாது. அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தகுந்த மற்றும் நீதிமன்றம் ஏற்கும் படியான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி, நியாயமான சந்தேகங்களுங்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.8 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியமானது அவர் தனது அரசு பணியைச் செய்யும் போது, சொல்லப்பட்ட ஒன்றாகவே கருத இயலும். எனவே, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் குறித்து அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி தீர்ப்பு அளிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. இறுதியாக மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் வழக்கை பரிசீலிக்கின்றபோது, அரசு தரப்பில் 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச

பிரிவுகள் 294(பி), 342, 307, 506(2) உ/இ 34–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

17. இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R. No. 34/2025–ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 சுமார் 37 செ.மீ நீளமுள்ள மரக் கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று, சா.பொ.2 சுமார் 34 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று. மேற்படி வழக்கு சொத்து பற்றிய உத்தரவு இந்த வழக்கில் தொடர்புடைய மற்றொரு வழக்கான SC.328/2025 என்ற வழக்கின் முடிவில் பிறப்பிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026–ம் வருடம் மார்ச் மாதம் 26–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V DEEPA
Ex. P8
Digitally signed by V DEEPA
Date: 2026.04.01 16:20:43 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.

**அரசுத் தரப்புச் சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. கோபிநாதன் |
| அ.சா.2 | திரு. ஹரிஹரன் |
| அ.சா.3 | திரு. முருகன் |
| அ.சா.4 | திரு. முரளிதரன் |
| அ.சா.5 | திரு. சின்னச்சாமி |

| | |
|---|---|
| அ.சா.6 | திரு. சூரியா |
| அ.சா.7 | திரு. சுபாஷ் |
| அ.சா.8 | திரு. லிங்கபாண்டியன், காவல் ஆய்வாளர் |

**<u>அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.04.2018 | தேதியிட்ட புகார் மனுவிலுள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.2 | 12.04.2018 | தேதியிட்ட 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அ.சா.3-ன் கையொப்பம் மட்டும், |
| அ.சா.ஆ.3 | 12.04.2018 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.3-ன் கையொப்பம் மட்டும், |
| அ.சா.ஆ.4 | 12.04.2018 | தேதியிட்ட பார்வை மகஜரிலுள்ள அ.சா.5-ன் கையொப்பம் மட்டும், |
| அ.சா.ஆ.5 | 12.04.2018 | தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.6 | 12.04.2018 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 12.04.2018 | தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | 12.04.2018 | தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.9 | 12.04.2018 | தேதியிட்ட 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும், |
| அ.சா.ஆ.10 | 12.04.2018 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.11 | 12.04.2018 | தேதியிட்ட படிவம் 91 |
| அ.சா.ஆ.12 | 11.04.2018 | தேதியிட்ட விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.13 | 14.06.2018 | தேதியிட்ட காயச்சான்று |

**<u>அரசுதரப்பு சான்று பொருள் :</u>**

| | |
|---|---|
| சா.பொ.1 | சா.பொ.1 சுமார் 37 செ.மீ நீளமுள்ள மரக் கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று, |
| சா.பொ.2 | சா.பொ.2 சுமார் 34 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று. |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும், சான்றாவணம் :</u>** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சான்று பொருள் :</u>** இல்லை

**<u>குறிப்பு:–</u>**

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. இந்த வழக்குடன் தொடர்புடைய மற்றொரு வழக்கான SC. 328/2025 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதால், சொத்து பற்றிய உத்தரவு மேற்படி வழக்கின் முடிவில் பிறப்பிக்கப்படும்.

V DEEPA
Ex. P8
Digitally signed by V DEEPA
Date: 2026.04.01 16:20:32 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.